**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**IA 33/2022 in D.O.P.No.19/2022**

**சாட்சியின் சான்றுரை PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ரோஷ்னி | வட்டம் | - | |
| த/பெ | - | லூர்துசாமி | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

06.02.2024 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

மனுதாரர் சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இருவீட்டார் சம்மதத்தின் பேரில் திருமணம் நடந்தாலும் ஒருவர் ஒருவரை பிடித்து தான் திருமணம் நடந்தது என்றால் இல்லை. எனக்கு திருமணம் பிடிக்கவில்லை. அதனால் எங்கள் வீட்டில் நிறுத்திவிட்டார்கள். இருந்தாலும் எதிர்மனுதாரர் வீட்டில் மீண்டும் மீண்டும் வந்து கட்டாயப்படுத்தி திருமணம் செய்தார்கள். அசல் மனுவில் என் திருமணம் கட்டாயத்தின் பேரில் நடந்தது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு திருமணத்தில் விருப்பம் இல்லையா அல்லது எதிர்மனுதாரரை திருமணம் செய்ய விருப்பம் இல்லையா என்றால் எதிர்மனுதாரரை திருமணம் செய்ய விருப்பம் இல்லை. தேவாலயத்தில் திருமணத்திற்கு முன்பு ஒப்புதல் கேட்டார்களா என்றால் ஆம். அவ்வாறு கேட்டபோது நான் ஒப்புக்கொண்டு தான் திருமணம் செய்தேன் என்றால் சரிதான். ஆனாலும் என் பெற்றோர்கள் பள்ளத்தில் விழவைத்துவிட்டார்கள். என் பெற்றோர்கள் சம்மதம் தெரிவித்ததால் அவர்களுக்காகவே நான் இந்த திருமணத்தை செய்துகொண்டேன். எனக்கும் என் கணவருக்கும் வயது வித்தியாசம் 10 வருடத்திற்கு மேல் என்றால் சரிதான். என் திருமணத்திற்கு நான் சொல்லியது போல் 3 பவுன் ஆரம் ¼ பவுன் மாட்டல் 1

பவுன் செயின் ஆகியவற்றை வரதட்சணையாக கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றும் அவ்வாறு நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு வசதி இல்லாததால் தான் வயது வித்தியாசம் கருதாமல் எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னிட்டு எனது கனவு என்னவாக இருந்தது என்றால் என்னை நன்றாக என் பெற்றோர் எவ்வாறு என்னை பார்த்துக்கொண்டார்களோ அவ்வாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற கனவோடு வந்தேன். ஆனால் எதிர்மனுதாரர் கஞ்சா அடித்துக்கொண்டு வந்து என்னை அடித்து சித்திரவதை செய்தார். என் நகைகளை எல்லாம் ஒரே நாளில் அடமானம் வைத்துவிட்டார். என் பெற்றோர் என்னை எவ்வாறு பார்த்துக்கொண்டார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் அவர் அதை பற்றி கேட்கவே இல்லை. என் நகையை பற்றி தான் பேசிக்கொண்டிருந்தார்கள். திருமணம் ஆன 3ம் நாள் நான் தனிக்குடித்தனம் போனேன் என்றால் நானாக போகவில்லை. என் கணவர் தான் அவரது தங்கை சண்டை போட்டதை பார்த்து நான் இருக்கும் போதே இவ்வாறு சண்டை போடுகிறார்களோ நான் இல்லை என்றால் என்னாகும் என்று சொல்லிவிட்டு என்னை தனிக்குடித்தனம் அழைத்து போனார். என் கணவர் அப்போது என்னுடன் நன்றாக இருந்தார். அவர் சுயமாக முடிவு எடுக்க தெரியாதவராக இருந்தார். தனிக்குடித்தனத்தில் நான் என் தாயார் என் கணவர் இருந்தோமா என்றால் ஆம். என் தாயார் என்னை பார்ப்பதற்காக வந்தார். அவர் நான் அந்த வீட்டை விட்டு வெளியேறும் வரை இருந்தாரா என்றால் இல்லை. 2 நாட்கள் தான் இருந்தார். என் கணவருடன் நான் திருமணத்திற்கு பிறகு என்னிடம் முதல் நாளே நான் வேறு யாரையாவது காதலிக்கிறேனா என்று கேட்டார். நான் தனிக்குடித்தனம் போனதால் தான் என் குடும்பத்திற்கும் என் கணவரின் பெற்றோருக்கும் சிறிய மனகசப்பு என்றும் அதனால் ஒரு விரிசல் ஏற்பட்டது என்றால் நான் எதுவும் செய்ய இயலாது. நான் ஒரு முறை நடந்ததை மறந்து என் கணவருடன் சேர்ந்து

வாழ விருப்பமா என்றால் எனக்கு விருப்பம் இல்லை. நான் அங்கு சென்றால் இறந்துவிடுவேன். எங்களுக்குள் தாம்பத்திய உறவு நடக்கவில்லை என்றும் அதற்காக மருத்துவ பரிசோதனைக்கு நான் தயாரா என்றால் தயார்தான்.

குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.